File (16)

Registered as a Newspaper

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 4 விபவ ஞூ பங்குனி மீ 27 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 02 (09 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-104

## ✶ யாழ்ப்பாண மாவட்டத்தில்
# பாதிப்புற்ற கிராமங்கள் தோறும்
# நடமாடும் சுகாதார நிலையங்கள்

## செஞ்சிலுவைச் சங்கம் இலவச சேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

யாழ்ப்பாண மாவட்டத்தில், இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் நடமாடும் சுகாதார நிலையங்கள் இயங்க உள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யவும், தொற்றுநோய் போன்ற ஆபத்திலிருந்து காப்பாற்றவு மென யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் சுகாதார நிலையங்களை இலவசமாக இயக்கவுள்ளது.

ஆரம்பத்தில் நடமாடும் சுகாதார நிலையம் ஒன்றை உருவாக்கி, பின்னர் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக யாழ். செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

முதலில் ஆரம்பிக்கப்படும் நடமாடும் சுகாதார நிலையத்தில் இரண்டு டாக்டர்கள், ஒரு சுகாதாரக் கல்வி அதிகாரி, ஒரு கிராமியச் சுகாதார உதவியாளர் ஆகியோர் பணிபுரிவர்.

இந்த நடமாடும் சுகாதார நிலையம் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஓர் ஒழுங்குமுறையின்படி சென்று சம்பந்தப்பட்ட கிராமங்களில் வாழும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. - சு. க. ஆதரவாளர் நான்குபேர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 9

தென் இலங்கையில் மாத்தறை மாவட்டத்தில் தனித்தனி சம்பவங்களில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் இருவரும் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் இருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதே மாவட்டத்தில் ஜே. வி. பி. தீவிரவாதிகள் என்று கருதப்படும் மூன்று பேரின் சடலங்கள் வீதியில் கிடக்கக் காணப்பட்டன. அச் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (உ-எ)

## தமிழ் வர்த்தகரின் லொறி தீக்கிரையானது
### இனிகத்தேனையில் சம்பவம்

நுவரெலியா, ஏப்ரல் 9

அட்டனுக்குச் சென்றுகொண்டிருந்த தமிழ் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான லொறி ஒன்று இனிகத்தேனையில் மறிக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டபின் தீக்கிரையாக்கப்பட்டது.

ஜே. வி. பியின் ஹர்த்தால் தினமான கடந்த 5 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றதாக எமது நுவரெலியாச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை நுவரெலியா, தலவாக்கொல்லைப் பகுதிகளில் கடந்த 5 ஆம் திகதி சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன. தனியார் வாகனங்கள் ஓடவில்லை.

அரச பஸ்களை இராணுவத்தினர் செலுத்தினர். பயணிகளிடம் பணம் வசூலிக்கப்படவில்லை.

அட்டனில் ஹர்த்தால் வெற்றியளிக்கவில்லை. (ஒ-58

## யாழ் நகரக் கடைகள் இன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப் 9

இன்று ஞாயிற்றுக்கிழமை எனினும் யாழ். நகரில் வியாபார ஸ்தாபனங்கள் அனைத்தும் திறந்திருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

யாழ் வர்த்தகர் சங்கத்தின் வேண்டுகோளின்படி சாய்ப்புச் சட்டப் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ் நகரக் கடைகள் மூடப்பட்டு வருவது தெரிந்ததே

அடுத்த வாரத்தில் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் கொண்டாடப்படுவதை ஒட்டி இந்த ஞாயிற்றுக்கிழமை கடைகளைத் திறப்பது என முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. (உ-9)

## தூர இடங்களுக்கான பஸ் சேவை இன்று ஆரம்பம்

வட பிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க உள்ளது.

தென்பகுதியில் ஜே. வி. பியினர் ஹர்த்தாலுக்கு வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே பஸ் சேவைகள் யாவும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்து வருவதை அடுத்து தூர இடங்களுக்கான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (ஒ-9)

## அணு நீர்மூழ்கி விபத்து:
## அதிபர் கோர்பச்சேவ் புஷ்ஷுடன் அவசர தொடர்பு

மாஸ்கோ, ஏப். 9

நோர்வே கடலில் அணு நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று மூழ்கிய சம்பவம் தொடர்பாக சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ் நேற்று அவசரமாக அமெரிக்க ஜனாதிபதி புஷ், பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தாட்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டார்.

மூழ்கிய நீர்மூழ்கிக் கப்பலினுள் இருக்கும் அணு ஆயுதங்களால கதிரியக்கப் பாதிப்பு ஏற்படாது என்று அப்போது திரு. கோர்பச்சேவ் இரு தலைவர்களிடமும் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் சோவியத் நீர் மூழ்கிக் கப்பலில் இருந்த 90 மாலுமிகளில் 12 பேர் இறந்து விட்டனர் என்று பி. பி. சி. தெரிவித்தது.

(முன்னர் வந்த செய்தி ஏழாம் பக்கத்தில்)

## கலட்டி வாசி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஏப். 9

நேற்று மாலை 5-30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர், திருநெல்வேலி, கலட்டியைச் சேர்ந்த இராசையா மகேந்திரன் (வயது 42) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## ஏப்ரல் மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதிய ''வவுச்சர்'' கள் யாழ். செயலக ஓய்வூதியக் கிளையிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டன.

இதே வேளையில் ''வவுச்சர்''களுக்கான காசோலைகளும் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கிராமிய வங்கிகளில் இன்றே ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஏனைய வங்கிகளினூடாக ஓய்வூதியம் பெறுவோர் அடுத்த வாரத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும். (ஒ-9)

### சுபநேரம்

09 - 04 - 1989
பங்குனி-27
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09 - 07 முதல் 10 - 37 வரை
ராகுகாலம்:
04- 37 முதல் 06 - 07 வரை
சதுர்த்தி விரதம்

## புதிய அணுகுமுறையை இந்தியா பின்பற்ற வேண்டும்
### அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 9

இலங்கையில் அமைதிகாக்கும் பணியில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையைப் போக்குவதற்கு இந்தியா புதிய அணுகுமுறை ஒன்றைப் பின்பற்ற வேண்டும்.

கொழும்புக்கான இந்தியத் தூதர் திரு. ஜே.என். டிக்ஸிற்றுக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைவைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இப்படிச் சொன்னார்.

இந்தச் சிக்கலான பிரச்சினையை இந்தியாவினால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும்.

இந்திய - இலங்கை உறவை வலுப்படுத்தவும் இனப் போராட்டத்தைத் தணிப்பதற்கும் திரு. டிக்ஸிற்றின் பணிகள் உதவின.

— இப்படி திரு. தொண்டமான் மேலும் சொன்னார். (உ-எ)

### முச்சந்தி முரளி



புதிய அணுகுமுறைக் கதை கேட்டுப் புளிச்ச பழைய கதையாய்ப் போச்சுப் பாருங்கோ?

## சினிமா பாடகர் ஏ. எம். ராஜா விபத்தில் மரணம்

சென்னை, ஏப்ரல் 9

பிரபல பின்னணிப் பாடகரும், இசை அமைப்பாளருமான திரு. ஏ. எம். ராஜா நேற்று விபத்து ஒன்றில் மரணமானார். அவருக்கு வயது 57.

ஓடும் ரயிலில் ஏறும்போது தவறி வீழ்ந்த அவர் படுகாயமடைந்து மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டபின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப் பொருள்கள் யாழ். வந்து சேர்ந்தன

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிவாரண உதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தன.

இந்த நிவாரண உதவிகளில் 54 ஆயிரத்து 110 அலுமினியப் பாத்திரங்கள், 194 ஊன்றுதடிகள், 8 ஆயிரத்து 250 (மாணவர்களுக்கான) சீருடைகள், 33 ஆயிரத்து 500 அப்பியாசக் கொப்பிகள், 19 ஆயிரத்து 500 சாக்குகள் என்பன அடங்கி உள்ளன.

இவையனைத்தும் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஊடாக விநியோகிக்கப் படவுள்ளன. (ஒ-9)

## அவசரமாக வெளியேறும் வீ. எம். வீதிவாழ் மக்கள்

வல்வெட்டித்துறை, ஏப். 9

பருத்தித்துறை வீ. எம். வீதியில் வசிக்கும் பொதுமக்களில் பலர் தமது வீடுகளை விட்டு அவசரமாக வெளியேறி வருகின்றனர்.

இம்மாதம் ஆறும் திகதி மேற்படி வீதியில் தாக்குதல் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து அந்த வீதியில் வாழும் மக்களை இம்மாதம் 12 ஆம் திகதிக்கு முன் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டதாகக் கூறியே மக்கள் அவசர அவசரமாக வெளியேறி வருகின்றனர்.

ஏற்கனவே பாதிக்கப்பட்டு, தமது இல்லங்களுக்கு மிக அண்மையிலேயே வந்து சேர்ந்த இப்பகுதி மக்களை மீண்டும் வெளியேறுமாறு கேட்பதை நிறுத்துமாறு இப்பகுதி இந்திய இராணுவ உயரதிகாரிகளிடம் தூதுக்குழு ஒன்று கேட்டுள்ளது.

எனினும் அதற்கான சாதகமான பதில் எதுவும் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைத்ததாகத் தகவல் இல்லை. (அ-160)

## ஒலுமடுப் பகுதியில் தேடுதல்

மாங்குளம், ஏப்ரல் 9

மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் ஒலுமடுவுக்குச் சமீபமாக நடந்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து, அப்பகுதிச் சுற்றுடலை இந்திய இராணுவத்தினர் நேற்று அதிகாலை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

தேடுதலின்போது இளைஞர்கள், வயோதிபர்களை அழைத்துச் செல்ல முற்படுகையில் சில பெண்களின் அழு குரலை அடுத்து வயோதிபர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர். அவ்வீதியால் வந்த வாகனங்களும் சோதனையிடப்பட்டன. (ஒ-94)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

நேற்று ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதனால் இப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ-9-13)

# அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும்
# இல்லையேல் ஈழக்கோரிக்கை நியாயமாகிவிடும்

## பிரியாவிடை வைபவத்தில் டிக்ஸிற் உரை

கொழும்பு, ஏப். 9

இலங்கையின் மாகாண அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பலனுள்ள வகையில் உறுதியான முறையில் விரைவாக நடைபெற வேண்டும். இல்லையேல் ஈழக் கோரிக்கையின் தர்க்க நியாயம் மீண்டும் பொருத்தமுள்ளதாகிவிடும்.

—இவ்வாறு தெரிவித்தார் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்.

நேற்று முன் தினம் கொழும்பில் இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் அவருக்கு அளித்த பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது;

தமிழர்களின் அபிலாஷைகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய அரசுக்குச் சில உறுதிமொழிகளை அளித்திருக்கிறார்.

நிதி, நிலம் ஆகிய துறைகளில் மாகாண அரசுகளுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்குதல், வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புப்பற்றி முடிவு எடுப்பது, நாடற்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம்
பிரதி செய்ய நாடுங்கள்!
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ரம்பூர்ரக பூரண வினைத் திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. கிலோ ரூபா 350. 00 பிள்ளையார் 251, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [93]

நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 2 பரப்பில் சகல வசதிகளையும் உடைய நான்கு அறை வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வேலுப்பிள்ளை பொன்னம்பலம், சட்டத்தரணி, கொண்டாவில் மேற்கு. (99)

யாழ் மாநகர எல்லையுள் நாயன்மார்கட்டில் 2½ பரப்புக் காணியும் சகல வசதிகளுடனான சிறிய வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சந்திரசேகரி, 9, நொத்தாரிஸ் லேன், அரியாலை, யாழ்ப்பாணம். (10301)

சாவகச்சேரி மத்தியில் இரு பாதைகளுடன் கூடிய மின்சார வசதி உடைய 20 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு திருமதி சி. வேல்நாயகம் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (26)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/2135)

பிறமாயின் ஒரு நாள் லோமன் புரெயிலர்க்குஞ்சுகள் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 12-4-1989 ல் விநியோகிக்கப்படும். 10-4-89 க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். (1) திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, (2) கிருஷ்ணபா சென்ரர், திருநெல்வேலிச் சந்தி, (3) C S K பாம் சென்ரர், கச்சேரியடி, (4) தட்டாதெருச் சந்தி. [80]

நாற்பத்தி ஐந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) கறுப்பு சேவல் குஞ்சு விலை ரூ. 4.50 9 ஆம் 10ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். இல. 9, சந்தையா லேன், சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில். (10)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். கசாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/2136)

## மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!! புதுவருட மலிவு விற்பனை (4-4-89 - 13-4-89, புதுவருடமன்னை, கோட், பிளவுஸ்) Baby Shirt, Baby Frocks, சிறிய கவுண்கள் மற்றும் றெடிமேட் ஆடைகள், 'Fashion Garments'' 20, 22, கடைச்சாமிவீதி, (Off Navelar Road), யாழ்ப்பாணம். (10294)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, பிள்ளையார் நிலய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

## தேவை

வீடியோ கடையில் பணிபுரிய யாழ்நகரசபை எல்லைக்குள் வசிக்கும் 20 வயதுக்கு உட்பட்ட ஆண் உதவியாளர் தேவை. ஒெக்கோடிங் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: வீடியோ பிரசாந், 52, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [96]

நன்கு அனுபவம் உள்ள தேநீர் தயாரிப்பாளர் (ரீ மேக்கர்) சப்பிளையர்கள் வெயிற்றர் வேலை தெரிந்தவர்களும் நேரில் வரவும். யாழ் றிக்கோ, 352, மணிக்கூட்டுவீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (C- 2171)

மா, மிளகாய் அரைக்கும் பாவித்த நல்ல நிலையிலுள்ள மில் (Grinding Mill தேவை. தொடர்பு கொள்ளவும்: P.C. சுப்பிரமணியம் (இலேப் பாறிய அதிபர்), உதய சூரியன் லேன், உடுவில், சுன்னாகம். (34)

ஒலிப்பதிவு Recording செய்வதற்கு இருபாலாரும் தேவை. கணக்கு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: ஸ்வைரேஸ், இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44)

தாவடியில் உள்ள வைத்தியசாலைக்குப் பெண் உதவியாளர் தேவை. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். Dr. P. Ramanathan Thavady Kokuvil. [10332]

## அறை தேவை

கல்வி பயில்வதற்கு ஏற்ற யாழ். மாநகர எல்லைக்குள் உணவு வசதி கொண்ட அறை தேவை. C/o 482, உதயன், யாழ்ப்பாணம். (43)

## தவறிவிட்டது

வசாவிளான் தெற்கு வசாவிளானைச் சேர்ந்த செல்வன் சிவராஸ் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 680804575V பஸ்சுக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [10341]

மகேஸ்வரி கதிர்காமத்தம்பி ஆகிய எனது 347591696V இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [10325]

06-04-1989 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தியாகராசா பரமேஸ்வரன் (அடையாள அட்டை இல. 520732381 V) என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (30)

வல்லிபுரம் நடராசா ஆகிய எனது அடையாள அட்டையும், பென்சன் கார்ட்டும் ஆனைப்பந்தி ஆஸ்பத்திரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 358, Tip Top Shop, நாவலர் றோட், என்ற கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10340)

ஜோனசன் தேவராஜா பவர் ஆகிய பெயருடைய மோட்டார்சைக்கிள் லைசன்ஸ், டிரைவிங் லைசன்ஸ், இன்சூரன்ஸ் ஆகியன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தபால் பெட்டிச் சந்தி, 212 A.V. றோட் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்கின்றேன் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். [10335]

## Advanced English

புதிய பிரிவு ஆரம்பம்: 12-4-89 TOEFL படிப்புக்கு முன்னோடியான பாடத் திட்டம் இங்கள், புதன் நாட்களில். நேரம் 10.30-12 மணி வரை. S.B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (10298)

## மட்டுவிலில் 'மில்க்வைற்' சகாய விற்பனை

10-4-89 பொங்கல் திருவிழா அன்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து பெறுமதியான பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். 'மில்க்வைற்' யாழ்ப்பாணம். [சி/2175]

## விற்பனைக்கு

பாவித்த வேம்பு அலுமாரி, கட்டில், மேசைகள், கண்ணாடி அலுமாரி, Show - case, சிங்கர் மெஷின், T. V. Fan, கசற், றேடியோ, சொப்பர் Hero Children Bicycle மணிக்கூட்டுக் கடைகளுக்கு ஏற்ற கபேட், மேசை மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, யாழ்ப்பாணம். [10334]

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் இல. 40/5, கோவில்வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (46)

நல்ல பாவிப்பிலுள்ள டபிள் டோர் பிறிச் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (சி 2180)

## எவர்சில்வர் தயாரிப்புகள்

எங்கும் கிடைக்கின்றன. Rajz Brand எவர் சில்வர் தயாரிப்புக்கள் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமதி. தலைமுறை தலைமுறையாக நீடித்து நின்று பயன் தருபவை Rajz Brand Tea set, Dinner set (Round), Dinner set (Oval), Boiler Hot plate Lunch boxes Lunch carriers Cooking pans Thookucl addies, Office table, Tray with pen holders இன்னும் பல. காட்சி அறை S.A. தேவதாசன், குராவத்தை, சுன்னாகம். [C/1909]

விற்பனையாகிறது

Work Out Physics 'A' Level

ஆசிரியர் உ. சத்தியசீலன் B.Sc.

## காணி, கடை விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்தைக்கு வடக்கு எல்லையில் உள்ள ஏழரைப் பரப்புக் காணியொன்று கடைகளுடன் பிரயோசனம் வரும் தென்னை மரங்களுடனும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணிக்கு பிரதான வீதியில் இருந்து வடபுறக்கு எல்லையோடு பாதை அமைந்துள்ளது. தொடர்பு: S சிவராசா, பீடாரி கோவிலடி, தபாற்கந்தோர் ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (10316)

## சோதிடம்

பிறநாட்டுப் பயணம், பிறப்புச் சாதகங்கள், காதல் கல்யாணம், மனமகன் தொழில், திக்கு, மூழ் விபரங்களுடன் அறிந்து கொள்ளவும், திருமணப் பொருத்தங்கள் குறைந்த கணக்கில் பெற்றுக் கொள்ளவும், பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். செ. இராசேந்திரன் 'திருவுளம்' அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. [32]

## செங்கை ஆழியான் நாவல் இலவசம்

செங்கை ஆழியான் எழுதிய ''மண்ணின் தாகம்'' 25/- ரூபா. மழைக்காலம், ராஜதந்தியின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை கொடுத்து 'மண்ணின் தாகம்' நாவலை இலவசமாகவும் பெறலாம். ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [31]

## விற்பனை

பல வர்ணங்களில் லவ் பேட்ஸ் Love Birds) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். [சி 2179]

நஷனல் பொட்டபிள் டெக்குகள் N V 180, N V 100 பாவித்ததும் புதியனவும் விற்பனைக்குண்டு, மற்றும் 1000 w விடியோ, லைற்விடியோ கெட்டுகள் வீடியோ படப்பிடிப்பிற்கு பாவிக்கும் ஓரிஜினல் விடியோ கசற்றுகள் விற்பனைக்குஉண்டு. எவரிவஷன், 21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி 2181)

## விசேட கஷிவு

சுகவில் வருஷ இராசுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

## யுனைற் சேவிஸ்

ஆங்கிலத் திறமையுள்ள ஓர் பெண் ஊழியர் தேவை. 12ஆம் திகதிக்கு முன் சமுகம் தரவும்- காலை 10 - 12 மணி வரை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Unite Service No. 165, Hospital Road, Jaffna. [36]

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy - line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2088]

## சேவை

Typing Roneo மெஷின்கள் பழுது பார்க்கவும், விற்கவும் Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/2154]

## வகுப்புக்கள்

ஆங்கில Typing Shorthand வகுப்புக்கள் கிழமை நாட்களிலும், வாரஇறுதி நாட்களிலும் வெவ்வேறு அனுபவமுள்ள ஆசிரியைகளினால் நடாத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes, 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/2155]

## தட்டச்சு ரேனிங்

தரமான தட்டச்சு ரேனிங்கை வேலைகளுக்கு யாழ்நகரிலேயே என்றும் Teens Copy 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/2133]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புதிய மாணவர்களுக்கான முதலாம் தவணை ஆரம்பம் 1988/89

1988/89 கல்வியாண்டின் கலை, மருத்துவம், விஞ்ஞான பீட புதியமாணவர்களுக்கான முதலாம் தவணை 17-04-89 ஆரம்பமாகவுள்ளது.

மாணவர்கள் தத்தமது பீட பீடாதிபதியிடம் 17-04-89 காலை 9மணிக்குச் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

புதிய மாணவர்களுக்கான ஆங்கில தகைமைகாண் தேர்வு 17-04-89 1.00 மணிக்கு நடைபெறும்.

பதில் பதிவாளர். (சி/2189)

## எமது நேற்றைய வெளியீடுகள்

(1) நிழல்கள் ரவி, ராதிகா **தென்றல் சுடும்** [PYRAMID]

(2) கவுண்டமணி, K. R. விஜயா **என் அருமை மனைவி** [PYRAMID]

(3) விஜயகாந்த், ஷோபனா **பாட்டுக்கு ஒரு தலைவன்** [PYRAMID]

(4) ராம்கி, பல்லவி **யோகம் ராஜ யோகம்** [PYRAMID]

(5) பாண்டியராஜன், கௌதமி **வாய்க் கொழுப்பு** [PYRAMID]

(6) மேல் நாடுகளில் சீர்காழி **இசைக் கச்சேரி** [PYRAMID]

(7) விஜயலலிதா **ரிவால்வர் ரீட்டா** [PYRAMID]

(8) ஏக்நாத் - பாகம் 12

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2192] தொலைபேசி: 23665

## சென் மேரிஸ் தையல்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப் 9 யாழ் மேற்றிராசன மனித முன்னேற்றநற நிலைய உதவியுடன் பயிலிட்ட காணிக்கை மாதா ஆலயத்தில் இயங்கி வரும் சென் மேரிஸ் தையல் பயிற்சி நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தையல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை மயிலிட்டி பங்குத்தந்தை அருட் திரு. பீற்றர் துரைரத்தினம் திறந்து வைப்பார். கண்காட்சி அன்றைய தினம் மாலை 4 மணிவரை நடைபெறும்.

யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத் தலைவர் அருட் திரு பவுல் அடிகளார் பயிற்றப்பட்ட பெண்பிள்ளைகளுக்குச் சான்றிதழ்கள் வழங்குவார். (ச)

# PERSONAL CLASSES - 1991

230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல் (அடிப்படை)

சோதிலிங்கம் (B. Sc Hons)

Tues - 8.00 - 9.00 a. m.

[C/2191]

# 60ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சின்னையா தேவதாஸ் (நடராசா)

மண்ணில்:- 1956 - 06 - 19 விண்ணில்:- 1989 - 02 - 04


வெள்ளையுள்ளம் கொண்ட அண்ணனின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் 1989-04 09 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்: தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

நெல்லியான், செம்பியன்பற்று (10334)

# 23 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



அமரர் கிருஷ்ணன் கந்தசாமி ஆச்சாரி

பிறப்பு: 24-6-1914 இறப்பு: 19-3-1989

11-4-89 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அத்துடன் மரணவீட்டில் பலவழிகளிலும் உதவிய எல்லோர்க்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரம்பன் கிழக்கு திருத்தணிகை, ஊர்காவற்றுறை. [10346]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையின்அடிப்படையை யுத்தநிறுத்தம் தீர்க்காது

## அரசியல்வாதிகள் கருத்து

கொழும்பு, எப்ரல் 9

ஒருவாரகால ஒருதலை பட்ச யுத்த நிறுத்தம் பிரச்சினையின் அடிப்படையை எந்தவகையிலும் தீர்க்காது என்று அரசியல்வாதிகள் இருவர் கருத்து வெளியிட்டனர்

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன சொன்னதாவது;

'யுத்தநிறுத்தத்துடன் அரசு பேச்சுக்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்; இல்லையேல் எவ்வித பயனும் ஏற்படப் போவது இல்லை'.

சுதந்திரக்கட்சி எம். பியும் முன்னாள் பாதுகாப்புப் ''ரதி அமைச்சருமான திரு.லக்ஷ்மன் ஜெயக்கொடி சொன்னதாவது.—

'உடனடியாகப் பேச்சுக்களுக்கு தீவிரவாதிகளை உடன் படச்செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யாவிட்டால் மக்கள் பாதிக்கப்படுவார்கள்' —என்றார். (ஒ—எ)

# இந்துக் கல்லூரியின் வரலாற்றில் சிவஞான தமிழ் மாநாடு ஒருமைல் கல்

## பழைய மாணவர் சங்கச் செயலாளர் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப்ரல். 9

சைவ மக்கள் தமது சமயம், மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிக் காப்பதற்காக அமைக்கப்பட்ட கல்லூரியே யாழ்.இந்துக்கல்லூரி, இக்கல்லூரி தனது நூற்றாண்டைக் கொண்டாடவிருக்கும் வேளையில் எமது கல்லூரியில் வைரவர் கோயில் ஒன்றை அமைத்து அதன் கும்பாபிஷேகத்தை நடத்த முன்வந்துள்ளது மிகவும் பொருத்தமானதே. சிவஞானவைரவர் சுவாமி திருக்குடமுழுக்குப் பெருவிழாவை முன்னிட்டு நாம் நான்கு தினங்களுக்கு நடத்தும் சிவஞானத் தமிழ் மாநாடு எமது கல்லூரியின் சரித்திரத்தில் ஒரு மைல் கல் ஆகும்.

யாழ் இந்துக் கல்லூரியில் இக் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் நடத்தும் சிவஞானத் தமிழ் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்துகையில் பழைய மாணவர் சங்கச் செயலாளரும் உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளருமான திரு. சு. டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு இந்துக்கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. கே. பூபாலசிங்கம் தலைமை வகித்தார்.

விழாவை சட்டத்தரணி டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

விழாத் தலைவரும் யாழ் இந்துக்கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளருமானதிரு. கே. பூபாலசிங்கம் பேசுகையில் கூறியதாவது; ''எமது கல்லூரியின் மாணவர்கள் இலங்கையின் நாலா பகுதிகளிலும் உயர்ஸ்தானங்களை வகித்து பெரும் புகழ் ஈட்டி வருகின்றனர்.

எமக்கு வாழ்வளித்த தாயின் புகழை நாலா பக்கமும் பறைசாற்ற நாம் எடுக்கும் விழா ஓர் முன்னேடி விழாவாக அமையட்டும்'' என்றார்.

சிறப்புச் சொற்பொழிவாற்றிய திருமதி வசந்தா வைத்தியநாதன் தமது உரையில் கூறியதாவது;

''இது ஒருகல்விக்கூடமல்ல. ஒரு சிறந்த விளை நிலம். இதில் விதைக்கப்பட்ட விதைகள் எல்லாம் நாலாபக்கங்களிலும் விளைந்து சிறந்த அறுவடையைத் தந்துள்ளன. இக் கல்லூரி, கல்வியை மட்டும் அளிக்கவில்லை.

தமிழ்மக்களின் தமிழ்ப் பண்பாடு,கலாசார மையமாகவும் விளங்குகிறது'

இங்கு பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் வைரவரும், சிவனே, வைரவர் அச்சத்தைத் தரும் தோற்றத்தை உடையவராயினும் மன உறுதியும், வைராக்கியமும் உடையவர். வைரவரின் மன உறுதியையும் வைராக்கியத்தையும் நாம் பின்பற்ற வேண்டும்.

நாம் கல்வியினுலோ செல்வத்தினுலோ அவனை அடைய முடியாது. பக்தி ஒன்றினுலேயே அவன் திருவடிகளைப் பற்றிக் கொள்ளலாம்.

எமது நாயன்மார்களில் செயற்கரியனவற்றை யார் செய்தார் என வாதாடுகிறோம். எடைபோடுகிறோம்.

கொழும்பில் ஒரு பட்டிமன்றம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொள்ள நானும் சென்றிருந்தேன். அங்கு சென்றபொழுது பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதிய கடிதம் ஒன்று எனக்குத் தரப்பட்டது.

அக்கடிதத்தில் பண்டிதர் ஐயா அவர்கள் ''எமது 63 நாயன்மார்களும் செயற்கரிய வைகளைச் செய்துள்ளனர். ஆகவே அவர்களுக்குள் ஏற்றத்தையும் இறக்கத்தையும்கற்பிக்காதீர்கள்'' என்று எழுதியிருந்தார். ஆகவே எமது நாயன்மார்களை எடைபோட நாம் யார் என்ற கேள்வி எழுகின்றது.''

இப்படி அவர் கூறினர்.

அளவிலாத பெருமை என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய ஆசிரியர் திரு. சிவமகாலிங்கம் கூறியதாவது:-

தமிழ்த்தாய்க்கு அணிகலனுக நாயன்மார்கள் தந்த திருமுறைகளும் பிரதான பங்கு வகிக்கின்றன.

பன்னிரண்டு திருமுறைகள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கிஷங்கள்.

இக் கல்லூரியில் அறிவையும் ஞானத்தையும் மட்டுமல்லாது அருளையும் பக்தியையும் பெறக்கூடிய விதமாக ஞான வைரவப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார்.

பெரிய புராணம் குடிமக்கள் காப்பியம், மன்னர் வரலாறு மட்டுமல்லாது சாதாரணமாக காணுகின்ற மக்களையும் பற்றி அழகாகக் காட்டியுள்ளது.

பண்பாடு, கலாசாரம், பாரம்பரிய விழுமியங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டுகின்ற அற்புத வரலாற்றுக் களஞ்சியமாக சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் திகழ்கிறது.

இப்படி அவர் கூறினர். (ச-69)

## மக்கள் தொண்டர் படைக்கான ஆட்சேர்ப்பு

1. வடமராட்சிப் பகுதியில் மக்கள் தொண்டர் படைக்கான ஆட்சேர்ப்பு பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

| இடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| அ. கரவெட்டி உ. அ. அதிபர் பணிமனை | 11 - 4 - 89 செவ்வாய்க்கிழமை | காலை 9.00-12.00 |
| ஆ. பருத்தித்துறை உ. அ. அதிபர் பணிமனை | 12 - 4 - 89 புதன்கிழமை | காலை 9.00-12.00 |

2. முன்னணி அரசாங்க அதிகாரிகளும் பிரஜைகளும் ஆட்சேர்ப்புக் குழுவின் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

3. மக்கள் தொண்டர் படையில் சேர்வதற்கான விதிகளும் நிபந்தனைகளும் 29 - 3 - 89 'உதயனி'ல் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு அமையும்.

மக்கள் தொண்டர் படை,
வடமராட்சி

(C/2074)

## வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி

## ஏல விற்பனை

வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுவீப்பிங் சீனி, பழுதான உழுந்து, கொப்பி, நெத்தலித்தூள், கயிறு போன்ற பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ஏலவிற்பனை எதிர்வரும் 22- 04- 89ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு சங்கத் தலைமைக் கந்தோர் வளவில் நடைபெறும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் கந்தோர் வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

— பொது முகாமையாளர்

நீர்வேலி.
1989 - 04-06

(C/2091)

## இன்று முதல்!

சாவகச்சேரி

● தேவேந்திரா வெண்திரையில் ●

தினசரி காலை 10.30 — பிற்பகல் 2.30

''உயிரே உனக்காக'' புகழ்



★ மோகன் ★ நதியா ★ செந்தில்
★ ரவிச்சந்திரன் ★ அருணு ★ மனோரமா
நடித்த

## பாடு நிலாவே!

சகோதரியை சற்பழித்த காதலியின் தந்தையை பழிக்குப்பழி வாங்குவதனை கண்டு களியுங்கள்!

இனிய பாடல்கள் நிறைந்த காதல் சித்திரம்

வின்ஸரில் விரைவில்

★ கமலின் ★

## காக்கிச் சட்டை

[47]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்:

31-12-1960

● ● ●

விண்ணுலகில்:

21-03-1988

### அமரர் திருமதி
### உமாபதி - விக்னேஸ்வரமூர்த்தி
(உமா, தவம் நாவற்குழி.)

திருமணம்:
20. 01. 1988

ரோசா மலர் தூது சொல்ல
சோடிக் குருவி தேடிவர
காதல் வசப்படலாகி
பொங்கலும் பொங்க உளம் சார் மனம் பொங்க
நாவற்குழியூர் சித்தி விநாயகர் திருத்தலம் தனிலே
விக்னேஸ்வரமூர்த்தி — உமாபதி திருமணம்
பலர் புடை சூழ நிகழ்ந்தது நல்லறம்.
இல்லறத் தேனை இனிக்கச் சுவைக்கையில்
காலக் கயவன் கண்படலாச்சே
முன்னைத் தவத்தால் பெற்ற தவப்பொருள்
பின்னைத்துயரில் மூழ்கடித்ததுவே
ஆறும் துணையென இருந்த அன்னை?
தேறும் நிலை பெற யாது செய்வாள்
அன்புக் கொரு தங்கை தானிருந்தாள்
அதையும் இழந்தவன் என்செய்வான்
பொல்லாத் துயர்தான் போகட்டுமேன்
எல்லா மனிதருக்கும் இது சகசம்
என்று இருப்பவர் ஆறட்டுமே!
உமாவை நேசித்தவர்களே இவளின் ஆத்ம
சாந்திக்காக இறைவனை மன்றாடுங்கள்.

பிரிவால் துயருறும்:

அம்மா, அண்ணா, அண்ணி,
அன்பு நெஞ்சங்கள்.

''மகேஸ் வாசா''
பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி.

[13]


# வட்டியை முன்னரே கொடுக்கும் புதிய சேமிப்புத் திட்டம்

## இலங்கை வங்கி ஆரம்பிக்கிறது

யாழ்ப்பாணம், ஏப் 9

இலங்கை வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி புதிய சேமிப்புச் சான்றிதழ் திட்டம் ஒன்று இம் மாதம் முதல் அமுல்படுத்தப்பட இருக்கின்றது.

இத் திட்டத்தின்படி உரிய வட்டி முதலில் கழிக்கப்பட்டு, முதல் பணம் பெறப்படும் என இலங்கை வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

200, 500, 1,000, 5,000, 10,000, 25,000 ரூபாக்களிலான இந்தச் சேமிப்பு முதலீட்டை அரை வருடம், ஒரு வருடம், இரண்டு வருடங்கள் என்ற காலக் கணக்கில் செய்து கொள்ள முடியும்.

இத்திட்டத்தில் ஆறு மாதங்களுக்கு முதலீடு செய்வோர் 10.5 சதவீத வட்டியும், ஒரு வருடம் முதலீடு செய்வோர் 11.1 சதவீத வட்டியும், இரண்டு வருடம் முதலீடு செய்வோர் 12 அரை சதவீத வட்டியும் பெறுவார்கள்.

இலங்கைவங்கியின் இந்தப் புதிய சேமிப்புத் திட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையிலும் மற்றும் கிளைகளிலும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

யாழ்ப்பாண நகரத்தில் இத்திட்டத்தின் அங்குரார்ப்பணம் .: ஆம் திகதி புதன்கிழமை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரதான கிளையில் செயப்படும்.

# யாழ். செஞ்சிலுவைக்கு மற்றொரு 'பிக்-அப்' ஜீப்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் வடபகுதிக் கிளைக்கு குளிரூட்டல் வசதி செய்யப்பட்ட மற்றொரு 'பிக்-அப் ஜீப்பை ஜப்பான் அரசு ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் ஊடாக வழங்கியிருக்கிறது.

இந்த ஜீப் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாகவும்-

இன்னும் சில தினங்களில் இங்கு வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வட பகுதிக் கிளையினால் செயற்படுத்தப்பட இருக்கும் சுகாதார சேவைத் திட்டத்திற்கு இந்த ஜீப் பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9]

# ஊசி மருந்து இல்லை; இருதய நோயாளர் பாதிப்பு

காங்கேசன்துறை, ஏப்ரல் 9

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் இருதய நோயாளர்களுக்கு ஏற்றும் 'பென்சதீன் பென்சிலின்' ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இருதய நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் மாதாந்தம்300க்கு மேற்பட்ட இருதய நோயாளர்கள் ஊசி மருந்தை ஏற்றி வந்தார்கள்.

ஆனால் கடந்த சில மாதங்களாக ஊசி மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் இருதய நோயாளர்கள் ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. [க-68]

# வெற்றியும் தோல்வியும் விளையாட்டு வீரனின் படிக்கட்டுகளாகும்

## மெய்வல்லுநர் போட்டியில் பேச்சு

பச்சிலைப்பள்ளி ஏப்ரல். 9

விளையாட்டு ஒரு மாணவனின் உடல் உறுதியை மட்டுமல்ல சிறந்த பண்பை நல்ல பழக்கவழக்கங்களை, குணதிசயங்களை ஏற்படுத்தக் கூடியது. வெற்றியும், தோல்வியும் விளையாட்டு வீரனின் படிக்கட்டுகளாகும். வெற்றி பெற்றவர்கள் மகிழ்ச்சியடைந்தாலும் தோல்வியடைபவர்கள் மனம் தளராமல் முயற்சி செய்து வெற்றி பெற முயல வேண்டும்.

எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட உசன் கொத்தணி அதிபர் க. சிவபாதசுந்தரம் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

வித்தியாலய அதிபர் எஸ். வரதராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கம்பர் இல்லம் முதலாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம் இரண்டாம் இடத்தையும் பாரதி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.


## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம் --- வவுனிகுளப் பிரிவு

கண்டி வீதி பரந்தனில் அமைந்திருக்கும் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிமனையிலுள்ள கேள்விப் பத்திர சபைத் தலைவரால் பின்வரும் வேலைக்கு 10-05-1989 காலை 10-00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை | வைப்புப் பணம் மீளப் பெறக் கூடியது | வைப்புப் பணம் மீளப் பெற முடியாதது |
|---|---|---|---|
| முருகண்டிக் குளம் புனரமைப்பு வேலைகள் | ரூபா 500,000/- அதற்கு மேலும் | ரூபா 250/- | ரூபா 50/- |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிப்பிட்ட தொகைக்கோ பிறிதொரு அரச திணைக்களம், கூட்டுத் தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நியதிச் சட்ட முறையிலான சபையிலோ தொகையின் 3 மடங்குக்கோ பதிவுள்ள ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் மேற்படி பணிமனையில் 07-04-1989 முதல் 08-05-1989 வரை அலுவலக நேரத்தில் வழங்கப்படும்.

எந்திரி. பொ. கந்தசாமி
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சிப் பிராந்தியம்.

நீர்பபாசனத் திணைக்களம்,
கிளிநொச்சிப் பிராந்தியம்,
பரந்தன்.

[C/2187]



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### பூபாலசுந்தரம் ஞானகுரு
( விந்தன் )

வீரனின் ஜனனம்: 13 - 04 - 1960
வீரனின் மரணம்: 02 - 04 - 1987

திதி நாள் : 09 - 04 - 1989

தங்கத்தில் தோய்ந்த தமிழ்பண் மீட்கும் பணியில் அங்கத்தில் குண்டேற்று அமரபதம் அடைந்து விட்ட எங்கள் விந்தா! உன் புன்சிரிப்பாலும் அன்பாலும் எல்லோரையும் கவர்ந்தவனே! உன் வீரம் தெரிந்து உன்னைப் பழி தீர்த்தனரோ? ஆண்டுகள் இரண்டுதான் சென்றாலும் எங்கள் எல்லோரின் இதயத்தையும் விட்டு என்றும் அகலாமல் இருக்கின்றாய். உன் தாய் விடும் கண்ணீர் என்று தான் உன் பாதம் வந்து அடையுமோ? விந்தா! உன் காலம் தான் அழிந்தாலும் உன் வீரமும், புகழும் என்றும் அழியாது. உன் ஆத்மா சாந்தியடைய என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உன் நினைவில் வாடும்:

அன்புத்தாய், அண்ணன்மார், தம்பி, அக்காமார்,
அத்தான்மார், மச்சாள்மார். மருமக்கள்,
பெருமக்கள்,
மற்றும்
உற்றார், உறவினர்களும் நண்பர்களும்.

... மகாலெட்சுமி,



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
26 - 04-1926

மறைவு:
08 - 04 -1985

### சின்னையா மார்க்கண்டு

எம் இதயத்தில் என்றும் மங்கா
ஒளிவிளக்காய் ஒளிரும் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, சகோதரன்,
சகோதரிகள், மருமக்கள்.

[10324]



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
23- 03- 1917

இறைவனடியில்:
02 04- 1987

திதி:
09- 04- 1989

### சண்முகம் கந்தசாமி
(இளைப்பாறிய உதவி ஆணையாளர் -
ஆட்பதிவுத் திணைக்களம், கச்சேரி திருகோணமலை)

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், உற்றாருக்குச் சேவகனாய், எமது இதய ஒளி விளக்காய் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்புநினைவும் அருள்வடிவமும் எங்கள் இதயங்களை விட்டு என்றென்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர். நண்பர்கள்.

''தண்மதி''
சின்னையார் கோவில் வீதி.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தசாமி ஸ்ரீதரன் (முரளி)

தோற்றம்: 10 - 05 1961
திதி: 09 - 04 - 1989
மறைவு: 02 - 04 - 1987

வல்லை நகர் வந்துதித்த மன்னவனே!
எம் தொல்லைகள் களைந்திடவே
எடுத்தாய் நீ சபதம் அன்று!
இன்று இல்லை நீ என்றாலும்
உன் நினைவு அகன்றிடுமோ
எம்மை விட்டு எந்நாளும்?

நாடு காக்கப் புறப்பட்டு வீழ்ந்து
பட்ட வீரர் காள் — நீங்கள்
நாட்டுக்காக உயிர் தந்து
உயர்ந்து நின்றீர்
பாடுபட்டு மறைந்த உங்கள் பண்பினைத்தான்
மறப்போமோ எந்நாளும்?

விண் மீதிலே வாழுகின்ற
வீரர்களே! நீங்கள் பன்னீரில்
கலந்து விட்ட சந்தனமே!
மண்ணை விட்டு மறைந்து நீர்
சென்ற போதும் எம் மனத்தினிலே
வாழுகின்ற தெய்வமானீர்!

உன் நினைவில் வாடும்:
அன்புத்தாய் சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

வேம்படி, வல்வெட்டித்துறை.

இவருடன் மரணித்த ஏனைய இளைஞர்களுக்கும் எமது நினைவஞ்சலிகள்!

[10315 A]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

சொற்சிலம்பம் இல: 96

சரியான விடைகள்:

இடமிருந்து வலம்:
1 புதுவருஷம் 5. ஆ, 6. குரு, 7. இம், 8. சீசா 9. புட்டம், 10. வன், 11. புல், 12. மான், 14. வாலே 16. சரவணன், 19. முக்தி, 20. சம்பா, 21. சித்தி 22. ஓம், 23. துன்பம்.

மேலிருந்து கீழ்:
1. புகு 2. துரும்பு 3. இருட்டு 5. ஆசான் 8. சீவன் 11. சணல் 12. மாலை 13 தவம் 14 வான் 15. சக்தி 17. ரசம் 18. பாணம் 19. முத்து 21. சின்.

முதலாம் பரிசு:
செல்வி தி. ஜீவா
53 பிறவுண் ரோட், முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:
திரு. ரி. ஜோய்,
7/81 பிறவுண் ரோட், முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இருவர் மட்டுமே சரியான விடைகளை அனுப்பியிருந்தனர்



கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Data Processing & Computer Programming Course**

புதிய பிரிவுகள்:

**Basic, Advanced Basic**

**Ist Payment Rs. 500/-**

★ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகும்.

IDP COMPUTER CENTRE
342, K. K.S. Road, JAFFNA.
(சிவன் கோயில் அருகாமையில்)
Branch: 7th Mile Post, K.K.S. Road, Mallakam
(C/2161)



ஸ்ரீ கணேச அச்சகம்
திருக்கோணமலை.

பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவைப் படுகின்றனர். நேரிலோ, தபால்மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

1. கொம்பசிட்டர்கள்
2. பைண்டர்
3. பிளேற்றின் மெஷின் மைண்டர்

இல 5, வித்தியாலய வீதி,
திருக்கோணமலை.
(10201)



வர்த்தகர்களே! வாடிக்கையாளர்களே!!

சற்றுக் கவனியுங்கள்

தோலகட்டி நெல்லிரசம்

எமது தயாரிப்பான நெல்லிரசம் வாங்கும்போது எமது புதிய வர்ண லேபலை கவனியுங்கள், மூடியையும் கவனியுங்கள். சிவப்பு மூடியில் வெள்ளை எழுத்தில் THOLAGATTY PRODUCTS என்று பொறிக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கவனித்து வாங்குங்கள்.

வர்த்தக அன்பர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

எமது தயாரிப்புக்களை முன்னர் விநியோசம் செய்த AGENTS அல்லது SOLE DISTRIBUTORS எவரும் எம்முடன் தற்போது இல்லை. அப்படியான எவருக்கும் எமது தயாரிப்புகளை தற்போது வழங்குவதில்லை.

எமது தயாரிப்புகளை நாம் எமது கண்காணிப்பில் நேரடியாக எமது விற்பனைப் பிரதிநிதி திரு. அ. இம்மானுவேல் மூலம் விநியோகிக்கின்றோம். அவருக்கு அவரின் போட்டோ ஒட்டப்பட்ட அறிமுக அட்டை ஒன்றும் வழங்கியுள்ளோம். எனவே போலி ஏஜன்டுக்களையோ - அல்லது போலி SOLE DISTRIBUTORS ஐக் கண்டு ஏமாறவேண்டாம் - விபரங்களுக்கு அவருடனோ அல்லது எம்முடனோ தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:

இயக்குநர்

செபமாலைதாசர் ஆச்சிரமம்
தோலகட்டி,
வசாவிளான்.

அருள் ஆச்சிரமம்
5, ரெம்பிள் ரோட்,
யாழ்ப்பாணம்.

[10321]


## அதிபர் பரீட்சை 24, 25இல்

இலங்கை அதிபர் சேவை தரம் I ஆம், II ஆம், III ஆம் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடக்கவிருந்த இப் பரீட்சை பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது அதிபர்தரம் III இற்குரிய பரீட்சை 24 ஆம் திகதியும், தரம் I, II இற்குரியபரீட்சை 24 ஆம், 25ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[2-21]

## வல்லாரை ஏற்றுமதி

மத்திய கிழக்கு நாடுகளுக்கு விரைவில் 10 ஆயிரம் கிலோ வல்லாரை ஏற்றுமதி செய்யப் படவுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் வல்லாரையை உற்பத்தி செய்து அதனை ஏற்றுமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஏற்றுமதி முகவர் நிலையம் மேற்கொண்டு வருகிறது.

ஒரு ஏக்கரில் வல்லாரை செய்கை பண்ணினால் மாதம் 75 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெறலாம் என்று கூறப்படுகிறது.

## 'பேராசிரியர் வித்தி மாணவரின் வழிகாட்டி'

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

'அமரர் பேராசிரியர் வித்தியானந்தன் யாழ் வளாகத்தின் துணைவேந்தராகவும் மாணவர்களின் வழிகாட்டியாகவும் விளங்கினார். அமரர் வித்தியானந்தனின் சேவைகளை தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே நினைவு கூரும்'

கிளிநொச்சிப் பகுதியின் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரி வகுப்பு மாணவர் ஒன்றியமும் விஞ்ஞானக் கல்வி நிலைய சிரேஷ்ட மாணவர் ஆசிரியர்களும் இணைந்து நடத்திய துணை வேந்தர் வித்தியானந்தனுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய நிலைய அதிபர் திரு. எம். ஏ. கனகசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. வீ. தர்மராசாவும் நிலைய உப அதிபர் வே. மகாலிங்கமும் மற்றும் பட்டதாரி மாணவர்கள் பலரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

(க)

## வாக்குக் கொடுத்த அதிகாரப் பங்கீட்டை ராஜீவ் காந்தி பெற்றுத்தர வேண்டும்

### வரதராஜப்பெருமாள் சொல்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 9

வாக்குக் கொடுத்த அதிகாரப் பங்கீட்டை, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி எமக்குப் பெற்றுத்தரவேண்டும்.

மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து, சிங்கள அரசியல் பிரதிநிதிகள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச, மாகாண சபைகள் தொடர்பாக முதலமைச்சர்களை அழைத்துக் கடந்த வியாழக்கிழமை பேசினார்.

அதில் கலந்துகொண்ட பின்னர் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் திரு. வரதராஜப் பெருமாள் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குறிப்பிட்ட சில அதிகாரங்களையும் கடமைகளையும் மாகாணசபைகளுக்கு தாமதமின்றிக் கையளிக்கவேண்டும் என்று அமைச்சர்களையும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்திப்பின்போது ஜனாதிபதி பணித்தார்.

#### பிரச்சினைகள்

இது தொடர்பாகக் கூடிய விரைவில் தேவையான சட்டங்கள் கொண்டுவரப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்.

மத்திய அரசினதும் மாகாண சபைகளினதும் பொறுப்புக்கள், அதிகாரங்கள் பற்றிய சில பிரச்சினைகள் எழுந்துள்ளன.

மாகாணசபைகள் சட்டம் தொடர்பான விதிகளுக்குச் சரியான சட்டவியாக்கியானம் அளிக்கும்படி ஜனாதிபதி சட்டமாஅதிபரைப் பணித்திருக்கிறார்.

மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது பற்றி சிங்கள அரசியல் பிரதிநிதிகள் சிந்திக்கவேண்டும்.

பெரும்பான்மைச் சிங்களவர் மற்றும் சிறுபான்மைத் தமிழர் ஆகியோருக்கு இடையே நம்பிக்கை ஊட்ட இது உதவும்.

வாக்குக் கொடுத்த அதிகாரப் பங்கீட்டை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எமக்குப் பெற்றுத் தரவேண்டும்— என்றார்.

(அ-எ)


BITSMANS
INSTITUTES,
MANIPAY

A/L 91

கலை, வர்த்தகம். விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

Phy: சௌந்தி
தி, வெ. 1.00

Che: மணியம்
தி. வெ. 2.00

Pur, App: கமலசிங்கம்
செ, வி 2.00

Zoo: ஈசன்
சனி, ஞா. 2.30

Bot: நேசன்
சனி, ஞா. 3.30

Eco: சின்னத்தம்பி
சனி, ஞா. 9.00

Com: தேவா
பு, வெ 7.30

Acc: இராஜன்
தி, பு, வெ. 8.30

Tamil, H.C: பாலா
தி, பு, வெ 7.30

Logic: S.S மனோகரன்
செ. வியா, 5.00

[6]



மென்டிஸ்

வெட்

88

சாராயம்



மக்களின் புதிய நண்பன்

நாள் முழுதும் உடலும் மூளையும் உள்ளமும் சோரவும் சோரவும் உழைத்துக் களைத்து வரும் பொது மக்களுக்கு உற்சாகம் ஊட்ட, இப்போது மென்டிஸ் வழங்கும் மேன்மை மிக்க புதிய நண்பன்!

விசேஷ ஹல்மில்ல மரப் பீப்பாய்களில் கணிசமான காலம் சேமித்துப் பதப்படுத்திய மென்டிஸ் வெட 88 தெங்குச் சாராயம். சிறப்புச் சேர்வம்சம் கொண்டது:

ரூ. 81/=

சாரம் : 33% - 34%

வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மென்டிஸ் அன் கம்பனி உற்பத்திப்பொருட்களின் விநியோகஸ்தர்கள்

IMPETUS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் கூற்று இன்று நிதர்சனமாகி உள்ளது

## நினைவு தினக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, ஏப். 9

''எனது காலத்தில் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது விட்டால் பின்னர் பெரிதும் கஷ்டப் படுவீர்கள்'' என்று தந்தை செல்வா அன்று கூறினர். அந்தக் கூற்றின் தாற்பரியத்தை இன்று நிதர்சனமாகவே நாம் காண்கிறேம். நாடு முழுவதுமே இன்று அமைதியின்றித் தவிக்கிறது.

தெல்லிப்பளை கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம் பெற்ற தந்தை செல்வா நினைவு தின அஞ்சலி வைபவத்தில் கலந்து உரை நிகழ்த்திய வண. சாம். அல்பிரட் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது;-

தந்தை செல்வாவின் அரசியல் காலம் முக்கியத்துவம் வாய்ந்தது.

தன்னைப்பற்றியோ, தனது சுகபோகங்களைப் பற்றியோ கருதாமல் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தவர் ஆவர். வருங்காலத்தைப் பற்றியே சிந்தித்துச் செயல்பட்டார்.

தமிழ் மக்கள் மனதில் பேதங்களை வளர்க்காமல், தமிழினம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் தந்தை செல்வா. வடக்கு மக்களையும், கிழக்கு மக்களையும் ஒரே பாதையில் அணிவகுத்துச் செல்ல அவர் வழிகாட்டினர்.

தந்தை செல்வாவின் வழியைப் பின்பற்றி நாமும் ஒற்றுமையை வலுப்படுத்தி அவர் காட்டிய வழியில் அமைதி சமாதானத்தை உருவாக்க முயலவேண்டும். இதுவே நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

இப்படி அவர் கூறினர்.

வண. கிறிஸ் டி றெபேர்ட் அடிகளாரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராசாவும் மற்றும் பல பிரமுகர்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(உ)


## பிரயாண ஒழுங்குகள்

✱ சவூதி அரேபியா

**அல்ருஜ் கோம்பனி**

கிளீனேர்ஸ் — 400 SR + F.A.

**S. O. M. C.**

கிளீனேர்ஸ் — 400 SR + F.A.
றைவேஸ் — 650 SR + F.A.
வெல்டர் — 600 SR + F.A.
காபென்ரர் — 600 SR + F.A.
மேசன் — 600 SR + F.A.

✱ **KUWAIT**

H. V. DRIVERS — 45 D

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கந்தோர் திறக்கப்படமாட்டா.

தொடர்பு:

**நியூயோர்க் ரவல்ஸ்**

K. K. S. வீதி, மல்லாகம்.

[C-2176]



## உடனடி வேலைவாய்ப்பு

**குவைத்**

வாகன சாரதிகள் (Drivers) — சம்பளம் 7000/-
(4 வருடத்துக்கு குறையாத அனுபவம்)
வீட்டுப்பணிப்பெண்கள் — சம்பளம் 3500/

**கனடா**

வீட்டுப்பணிப்பெண்
(இரண்டு வாரங்களில் பயணம்)
ஆங்கிலம் பேசத் தெரிந்தவர், ஒருவர் மாத்திரம் தேவை. முதல் வருபவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அமெரிக்கா**

நேரடிப்பயணம்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்க:
போகவிரும்புவோர் 6 புகைப்படங்கள், கடவுச்சீட்டு ஆகியவற்றுடன் 10 ஆம் திகதிக்கு முன்பு நேரில் வரவும்.

முகவரி:

112, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(10309)


## வேலணையில் கோட்டக்கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம், ஏப். 9

தீவுப்பகுதிகளின் நன்மை கருதி வேலணையில் கோட்டக் கல்வி அலுவலகம் எதிர்வரும் புதன்கிழமை திறந்துவைக்கப் படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் ஜனப். எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறர்.

தீவுப்பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரையும் தவருது இந்த வைபவத்தில் கலந்து கொள்ளும்படி கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் கேட்டிருக்கிறர்.

(உ-எ)


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

**COMPUTER DIPLOMA**

**Computer Programming and Data Processing in Basic Language**

பயிற்சிக் காலம்: 3 மாதம். ஆரம்பம்: 12. 4. 89
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடியநேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11 - 04 - 89




**UNIKCO COMPUTER CENTRE,**

No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
(உப தபாற் கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்

(C/20..)


பல்கலைக்கழக மாணவன் மரணம்:

# இந்திய இராணுவ அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகக் கட்டளை!

மட்டக்களப்பு, ஏப்ரல் 9

பேராதனைப் பல்கலைக்கழகம் 2ஆம் வருட பல்வைத்தியபீட மாணவன் மரணம் கொலை என மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜனப் எம். சீ. காரியப்பர் தீர்ப்பு வழங்கினர்.

கோட்டைக்கல்லாறு வாசியான இ. நீதிநாதன் (வயது27) என்னும் மேற்படி மாணவன் விடுமுறைக்கு வந்த சமயம் கைது செய்யப்பட்டார். மறுநாள் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணைக்கு சமுகமளிக்குமாறு இந்தியப் படை ஒத்தாச்சிமடம் முகாம் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

இக் கட்டளை களுவாஞ்சிக்குடி பொலீஸாரால் நேரடியாகக் கையளிக்கப்பட்ட போதிலும் மரணவிசாரணைக்கு பொறுப்பதிகாரி ஆஜராகவில்லை.

நீதிமன்றத்தில் ஆஜராகத் தமக்கு அதிகாரம் இல்லை என பொலீஸாரிடம் இந்திய அமைதிப்படை முகாமின் பொறுப்பதிகாரி தெரிவித்ததாகப் பொலீஸ் உத்தியோகத்தர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(ஒ-21


சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

வெற்றுச் சாக்கு

## கேள்வி விண்ணப்பம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3,000/- வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து தபால் உறையில் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்கு கேள்வி என எழுதப்பட்டு ''பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற முகவரிக்கு 17. 4. 89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப நோ. கூ. சங்கம்.

(C/2186)


## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி மாணிக்கம் பொன்னையா

தோற்றம்: 1914 - 01 - 10 மறைவு: 1988 - 03 - 21

திதி: 1989 - 04 - 09

எம் அன்பின் ஒளிவிளக்கே
பாசத்தின் பிறப்பிடமே,
எம் நெஞ்சங்களை விட்டுநீங்காச் சுடர்விளக்கே
நீர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உம் நினைவுகள்
எம்மை விட்டுப் பிரியவில்லை
உம் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சங்களில் அழியாத கோலங்கள்!

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேம்,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''ஸ்ரீதேவி''
ஆவரங்கால்,
புத்தூர்.

(39)

## வானுலகு வழியனுப்பு விழா
(அந்தியேட்டி)



### செல்வி ரதிகுமாரி சுப்பிரமணியம்

மலர்வு:- 24-06-1961 உதிர்வு:- 11-03-1989

செல்வி ரதிகுமாரி சுப்பிரமணியம் (உப அஞ்சல் அதிபர், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை) அவர்களின் வானுலகு வழியனுப்பு விழா 10-04-1989 திங்கட்கிழமை அச்சுவேலி, தோப்பு. ராஜவீதியில் 'அன்பகம்' இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறும் அன்றைய தினம் மதிய உணவில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேம்.

திரு. திருமதி துரை சுப்பிரமணியமும்
குடும்பத்தினரும்.
திரு. திருமதி ... இராசரத்தினமும்
குடும்பத்தினரும்.

[4]


# தேவை

1. பாய்மரம் — 18 அடி நீளமுள்ளது -- 20 மரம்

(விண்ணங்கு மரமாய் இருத்தல் வேண்டும். அடிப்பாகம் 3½ அங்குல விட்டமும், நுனிப்பாகம் 3 அங்குல விட்டமும் உடையதாக நேரானதாக இருத்தல் வேண்டும்.)

2. மரக்கோல் — 8 அடி நீளமுள்ளது — 20 கம்புகள்.


(விண்ணங்கு மரம் — 2 அங்குல விட்டமுள்ளதும் நேரானதாக இருத்தல் வேண்டும்.)

விநியோகிக்க விரும்புவர்கள் 15 - 04 - 89 க்கு முன் தங்கள் விலைக் கோரலை கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர்,
சீ - நோர் வலைத் தொழிற்சாலை,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

[சி-2188]


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### பாலச்சந்திரா

ஈழத்தில் பூத்தது: 14 - 12 - 1967 ஈழமண்ணில் உதிர்வு: 2 - 4 - 1987

திதி: 09. 04. 1989

ஈழம் காக்கப் புறப்பட்டாயே
எங்கள் பாலச்சந்திரா
ஈற்றில் இறைவனடி சேர்ந்தாயே
எங்கள் பாலச்சந்திரா
ஈராண்டு சென்றதுவோ
எங்கள் பாலச்சந்திரா
உனை ஈன்றவள் நெஞ்சம் குமுறுகிறதே
எங்கள் பாலச்சந்திரா
வீரத்தாய் பெற்றெடுத்தாளே
எங்கள் பாலச்சந்திரா
ஈழத்தில் உன் புகழ்பாடும் என்றென்றும்
எங்கள் பாலச்சந்திரா
அண்ணு அண்ணு என்ற சொல் கேட்குதடா
எங்கள் பாலச்சந்திரா
அந்த அண்ணு இன்று தனிமையில் நிற்கிறரே
எங்கள் பாலச்சந்திரா
உனதெண்ணம் நிறைவேறும் நாள் வெகுதூரமில்லை
எங்கள் பாலச்சந்திரா
உனை எண்ணுத நாளில்லை
எங்கள் பாலச்சந்திரா
எங்கள் கண்களில் நீர் வழியச் செய்து விட்டாயே
எங்கள் பாலச்சந்திரா
ஆருய் ஓடும் மண்ணினிலே உன் இரத்தங்கள்
எங்கள் பாலச்சந்திரா
அதில் உனது ஆத்மா சாந்தியடைந்தாலே
போதும் எங்கள் பாலச்சந்திரா

உன் பிரிவால் வாடும்;
உனது சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், தாய், தந்தை.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்

(10330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்

**பொருள்:**

மனைவியினுடைய அழகு பொருந்திய தோளில் மயங்கி அவளுக்கு அஞ்சி நடக்கிறவர்கள், தேவர்களை விடச் சிறந்த போகவாழ்க்கை உடையவர்களானாலும் சிறப்பற்றவர்களே ஆவார்கள்.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22073
09 - 04 - 1989
த. பெ. இல: 23

# ஒரு கை ஓசை ஒலிக்குமா?

தமிழ் சிங்கள புத்தாண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிறக்கிறது, புத்தாண்டுக் கொண்டாட்டக் காலத்திலாவது நாட்டில் வன்செயல்கள் இல்லாமல் அமைதி நிலவட்டும் என்ற எண்ணத்துடன் அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றை அவசரமாக அறிவித்திருக்கிறது, புதன்கிழமை தொடக்கம் அரசாங்கத்தின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஒரு வார காலத்திற்கு நடைமுறையில் இருக்கும்.

ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் எதுவும், சம்பந்தப்பட்ட சண்டைப் பிரதேசம் எதிலும், விரும்பப்படும் அமைதியைக் கொண்டு வருவது மிக மிகக் குறைவு. பிணக்கில் உள்ள இருசாராரும் சேர்ந்து யுத்த நிறுத்தம் கொண்டு வந்தால் இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துச் சமரசத்துக்கு வருவது எளிது.

பிரேமதாச அரசாங்கம் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் இரண்டு தடங்கல் முனைகளைக் கொண்டது.

அரசு தானுக, தனது வசதிப்படி, தான் நினைத்தவாறு தான் நிர்ணயித்த காலத்தில் யுத்த நிறுத்தம் செய்யவிருப்பதால், அடுத்த தரப்பினர் எதிர்ச்சாரார், மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே. வி, பி.யினர் அதனை ஏற்று, அவர்களும் யுத்த நிறுத்தம் செய்வார்களா என்பது முதலாவது தடங்கல் முனை.

சண்டையில், மோதலில், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருவரும், ஒருவர் மற்றவரைச் சந்தேகக் கண்ணோடு பார்ப்பதே வழமை, அடுத்தவரின் ஒவ்வொரு நடவடிக்கையும் தன்னைப் பலவீனப்படுத்தவே மேற்கொள்ளப்படுவதாக நினைப்பது இயல்பு. எதிரியின் பலம் அறிந்து மோது—என்ற கொள்கையை அடுத்தவர் சரிவரப் பின்பற்றுவார் என எதிர்பார்த்து தனது செயற்பாடுகளை வகுத்துக் கொள்வதும் சாதாரணம்.

பிரேமதாச அரசின் யுத்த நிறுத்தம் என்ன நோக்கமுடையதோ எனச் சந்தேகித்து ஜே. வி. பியினர் அதற்கு மதிப்பளிக்க — வன்செயல்களை நிறுத்த முன்வராது போகலாம், தம்மைக் கலந்தாலோசியாமல் கொண்டுவரப்படும் யுத்த நிறுத்தத்தில் தம்மை வீழ்த்த வல்ல பொறி எதுவும் இருக்கக்கூடும் என அவர்கள் சந்தேகிக்கலாம்.

எனவே அரசின் தன்னிச்சையான, ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்துக்கு ஜே. வி பியினர் செவிசாய்ப்பார்களா, மதிப்பளிப்பார்களா, அதனைக் கருத்திற்கொண்டு வன்செயல்களை நிறுத்துவார்களா என்பது பெரும் கேள்விக்குறியே.

யுத்த நிறுத்தம் பற்றிய தகவல் வெளிவந்த பின்னர் இலங்கைப் பொலீஸார் மீது ஜே. வி, பியினர் வெள்ளிக்கிழமை நடத்திய பெரும் தாக்குதல் மேலே குறிப்பிட்ட கேள்விக் குறியை நிலைப்படுத்துகிறது,

இந்தத் தடங்கலை நீக்குவதற்கு மார்க்கம் உண்டா? ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஜே. வி. பியினருடன் அரசு பேச வேண்டும். அதனை இரு தரப்பாக்க வேண்டும். அதுமட்டுமன்றி யுத்த நிறுத்தம் நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக்கப்பட வேண்டும். பேச்சுக்கள் இதய சுத்தியுடன் நடக்க வேண்டும். இருதரப்பினரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அரசாங்கம் அதனை முதலில் செய்து, எதிர்த் தரப்பினரின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

யுத்தநிறுத்தம் என்று முன்வைத்த காலை, வீறுப்பு, அந்தஸ்து என்பவற்றை ஒதுக்கிவிட்டு, அரசு முன்னெடுத்துச் செல்லவேண்டும். அமைதியில், சமாதானத்தில் உண்மையாகவே அரசு அக்கறை கொண்டால் முயற்சியையும், விட்டுக் கொடுத்தலையும் விட்டுவிடாமல் செயற்பட வேண்டும்.

தடங்கல்களில் இரண்டாவது ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வடக்கு-கிழக்கில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவம் இணங்குமா என்பதே.

இந்தியா இவ்விடயத்தில் பின்னடிக்கும் என்றே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். இந்திய இராணுவம் வேறு; சிறிலங்காப் படைகள் வேறு, இந்திய இராணுவம் தனக்கெனச் சில உத்திகளை வகுத்து வடக்கு கிழக்கில் செயற்பட்டு வருகிறது. இலங்கை அரசு நினைத்த காலத்தில் தாம் எப்படி யுத்த நிறுத்தம் செய்வது என்ற கருத்து இந்தியத் தரப்பில் நிலவுவதாகக் கூறப்படுகிறது

எது எப்படியோ, வடக்கு-கிழக்கில் அமைதி உருவாக வேண்டுமானுல் மேலே கூறியவை இங்கும் பொருந்தும்.

ஒரு கையால் தட்டி ஓசை முழுமையாக, சரிவர எழும்பாது. இரு கைகளும் சேர்ந்து தட்டினுல் தான் அரைகுறை ஒலி ஓசையாக சங்கநாதம் செய்யும்: அந்தச் சங்கநாதம் பிறக்க ஆளவந்தார் தரப்பின் இதயராகம் சுத்த நாதமாக ஒலிக்க வேண்டும்,

## பாராட்டு விழா

வடஇலங்கை சங்கீத சபையின் முன்னைய தலைவர்களான திருவாளர்கள் பெ. சபாநாயகம், இரா. சுந்தரலிங்கம், கு. சோமசுந்தரம் ஆகியோரைக் கௌரவித்து பொன்னுடை போர்த்திப் பாராட்டும் வைபவம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இவ் வைபவத்தின்போது 1987/88 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட 6 ஆம்தர ஆசிரிய பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். (ச)

# சோவியத் அணு நீர்மூழ்கிக்கப்பல் அணு ஆயுதங்களுடன் மூழ்கியது!

## நோர்வே கடலில் பயங்கர விபத்து

ஒஸ்லோ, ஏப்ரல் 8

நோர்வே கடலில் அணு சக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று மூழ்கியது.

நோர்வேயின் வட பகுதிக் கடலில் 6 ஆயிரம் அடி ஆழத்தில் மூழ்கிய அக்கப்பலில் அணு ஆயுதங்கள் இருந்தன என்று அறிவிக்கப்பட்டது.

இது ஒரு மோசமான விபத்து என்று நோர்வே பாதுகாப்பு அமைச்சர் விவரித்தார்.

நீர் மூழ்கிக் கப்பல் மூழ்கிய கடற்பகுதியில் சடலங்கள் மிதக்கக் காணப்பட்டன என்றும் அமைச்சர் சொன்னுர்.

கப்பலில் முதலில் தீ விபத்து ஏற்பட்டது என்றும் அதைத் தொடர்ந்தே கப்பல் மூழ்கியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான சமயம் 90 சோவியத் மாலுமிகள் கப்பலில் இருந்தனர். எத்தனை பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படவில்லை.

இவ்விபத்து பற்றி சோவியத் அரசு தகவல் எதுவும் வெளியிடவில்லை.

மூழ்கிய கப்பலில் இருந்த அணு ஆயுதங்களால் ஆபத்து ஏற்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. [எ]

## எலிஸபெத் மகாராணியின் சோவியத் விஜயம்

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும்படி திரு. மிக்செயல் கோர்ப்பச்சேவ் விடுத்த அழைப்பை இரண்டாவது எலிசபெத் மகாராணி ஏற்றுக்கொண்டார்.

இங்கிலாந்து மகாராணி ஒருவர் ரஷ்யாவுக்குக் கடைசியாக விஜயம் செய்தது 72 ஆண்டுகளுக்கு முன்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயத்துக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை.

லண்டன் விஜயத்தை முடித்துக்கொண்டு திரு. கொர்பச்சேவ் புறப்படும் முன்னர் பக்கிங்ஹாம் மாளிகையில் எலிஸபெத் மகாராணியார் பகல்போசன விருந்தளித்துக் கௌரவித்தார்.

## நிராகரிப்பு

பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காண இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் சமர்ப்பித்த புதிய யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் நிராகரித்துவிட்டார். (எ)

## தடை நீக்கம்

மாஸ்கோ, ஏப்.8

சோவியத் யூனியனில் மத சம்பந்தமான நடவடிக்கைகள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

சமய விவகார அமைச்சு இது சம்பந்தமான உத்தரவை நேற்று வெளியிட்டது. (எ)

## இந்திராகாந்தி கொலை புதிதாக ஐவர் மீது வழக்கு

புதுடில்லி, ஏப்ரல் 8

இந்திரா காந்தி கொலை தொடர்பாக புதிதாக 5 பேர் மீது விசேட புலனாய்வுக் குழு நேற்று புதுடில்லி பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

நாட்டுக்கு எதிராக போர் தொடுத்தது. திருமதி இந்திரா காந்தி கொலைச்சம்பவத்தில் ஈடுபட்டது — இக்குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய அகாலிதள் தலைவர் எஸ். எஸ். மான், அதிந்தர்பால் சிங், ஜக்மோகன் சிங், தலித் சிங் மற்றும் ரத்தன்சிங் ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவர்களில் ரத்தன்சிங் என்பவர் போட்டிக்குழுச்சண்டை ஒன்றில் கொல்லப்பட்டார்.

### ஆந்திர மாநில அரசியல்:

## நடிகர் நரசிம்மராஜுவின் புதிய கட்சி 'நவதேசம்'!

விஜயவாடா, ஏப்ரல் 8

ஆந்திரமாநிலத்தில் இன்னெரு நடிகர் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்தார்.

ஏராளமான தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து இருப்பவர் நரசிம்மராஜு.

இவர் ஆரம்பித்துள்ள புதிய கட்சிக்கு 'நவதேசம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

நரசிம்மராஜு புதிய கட்சி பற்றி சொன்னதாவது;

எனது கட்சி ராமராவின் தெலுங்கு தேசம் கட்சியுடன் சேராது. காங்கிரஸுடனும் ஜனதாவுடனும் கூட்டு வைக்கப்போவதில்லை.

தெலுங்கு தேசம் கட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதுதான் எனது கட்சியின் ஒரே நோக்கம்.

இப்படி அவர் சொன்னுர். (எ)

## யுரேனிய உற்பத்தியை நிறுத்த சோவியத் தலைவர் சம்மதம்

அணு ஆயுதங்களைத் தயாரிக்க உதவும் யுரேனியத்தின் உற்பத்தியை நிறுத்தப்போவதாக சோவியத் ஜனுதிபதி மிக்செயல் கோர்பச்சேவ் நேற்று லண்டனில் அறிவித்தார்.

இந்த யுரேனியத்தைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இரண்டை மூடிவிடப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சருடன் பேச்சுக்களை முடித்து விட்டு தாயகம் திரும்பும் முன்னர் இந்த முக்கிய அறிவிப்பை சோவியத் தலைவர் லண்டனில் வெளியிட்டார். (எ)

## கம்பூச்சியப் பிரச்சினை; அமெரிக்க நிலைப்பாடு!

கம்பூச்சியாவில் இருந்து வியட்னும் தனது துருப்புக்களை விலக்கிக் கொள்வதை கண்காணிக்க சர்வதேச அமைதிப்படை ஒன்றைஅங்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது. இந்த சர்வதேச அமைதிப்படை ஐ.நாவின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

துருப்புக்கள் விலக்கப் படுவதைக் கண்காணிக்க வருமாறு போலந்து, கனடா, இந்தியா ஆகிய நாடுகளை வியட்னும் ஏற்கனவே கோரியிருந்தது. [எ]

### சிங்கப்பூரில் இருந்து

## விமான மூலம் நேபாளத்துக்கு மருந்து, உணவுப்பொருள்

புதுடில்லி, ஏப்ரல். 8

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவுப் பொருள்களை விமானமூலம்சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து நேபாளம் இறக்குமதி செய்யத்தொடங்கி இருக்கிறது.

புதுடில்லியில் உள்ள நேபாளத் தூதர் திரு. பிந்தா ஷா இத்தகவலை ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

நேபாள - இந்திய வணிக உடன்பாடு கடந்த 23 ஆம் திகதியுடன் காலாவதியாகியதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களுக்கு நேபாளத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நேபாளத்துடனுன பொது எல்லைகளையும் இந்தியா மூடிவிட்டது.

''இதனுல் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் ஒரு குண்டூசியைக் கூட நேபாளத்தினுல் தரைமார்க்கமாக இறக்குமதி செய்யமுடியவில்லை''— என்று நேபாளத் தூதர் சொன்னுர்.

## தமிழகத்தில் தேர்தல்கள் ஒத்திவைப்பு

சென்னை, ஏப் 7

மாநகரசபைத் தேர்தல்களை வருகிற ஜூன், ஜூலை மாதங்களுக்குஒத்திவைப்பதாகமுதலமைச்சர் மு.கருணுநிதிநேற்றுச் சட்டசபையில் அறிவித்தார்.

இத்தேர்தல்களை மே மாதத்தில் நடத்த மாநில அரசு திகதிகள் குறித்திருந்தது.

18 வயது நிரம்பியவர்கள் இடம்பெறும் வாக்காளர்கள் பட்டியல் தயாரான பின்னரே இத்தேர்தல்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர் ஒத்திவைப்புக்குக்காரணம்கூறினுர். (எ-ஓ

# தன்னிகரில்லாத் தலைவனின் பணி சிறக்க வேண்டும்

ஏப்ரல்மாதம் 9ஆம் திகதி தமிழ்மண்ணுக்கு ஒரு உன்னத மகிழ்ச்சிகரமான நாள். கரம் பொன் மண் ஈன்றெடுத்த தலைவன் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளையின் 72ஆவது பிறந்தநாள்.

1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டஇவர் பல பங்குகளிலும், பாடசாலைகளில் அதிபராகவும் சேவையாற்றிக்கொண்டிருக்கையில் 1967ஆம் ஆண்டு மேமாதம் 11ஆம் திகதி ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

மகன் ஒவ்வொருவரும் அறிவான்.

கல்தோன்றி மண் தோன்ருக்காலத்துக்கு முன் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ்ப் பெருங்குடியென்று மார்பு தட்டி வீரம் பேசிய தமிழர் பரம்பரையிலே பிறந்த யாழ் ஆயர் தியோகு தன்னுடைய பாடசாலைக் காலங்களிலே ஒருதமிழன் என்று வழிகாட்டினுர். இலங்கையில் மட்டுமல்ல உரோமாபுரியிலும் கூட சாதனைகள் படைத்தவர் அவர்

எப்போதும் சிறந்த மாணவனுகவும், விளையாட்டு வீரனுகவும் திகழ்ந்தார்.

### தொகுப்பு: அருட்திரு ஞானரெட்ணம்
பாஷையூர் உதவிப் பங்குத் தந்தை

மறைந்த யாழ் ஆயர் ஜே. எமிலியானுஸ்பிள்ளையின் பிரிவை ஈடுசெய்ய, யாழ்மக்களை நேரியவழியில் இட்டுச் செல்ல யாழ் ஆயராக நியமிக்கப்பட்டார்.

உரிய நேரத்தில் உரமிக்க உயர் செம்மல் ஒருவர் யாழ் ஆயராக நியமனம் பெற்றது இறைவன் திருவுளமே. நாம் செய்த பெரும்பேறே.

கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும், நற்செய்தியின் தூதுவராகவும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட யாழ் திருச்சபையை தன் அறிவுரையாலும், ஊக்கமூட்டும் மொழிகளாலும், முன்மாதிரியாலும் வழிநடத்தி வருகிறுர் யாழ் ஆயர் தியோகு.

கத்தோலிக்கருக்கு நேரிய மேய்ப்பனுகவும், நம்பிக்கை இழந்த எம்மக்களுக்கு விடிவெள்ளியாகவும், தலைவனுகவும் இருந்து பணியாற்றும் யாழ் ஆயரின் மேய்ப்புப் பணியைத் தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்ல இலங்கையின் குடி

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் படைத்த இச்சீரிய சிந்தனையாளர் தன்பணியைக் கத்தோலிக்க திருச்சபைஎன்ற வரம்புக்கு வெளியே இறை அரசு என்ற எல்லைகளற்ற பேரரசின் மக்கள் அனைவருக்கும் செய்துவருகிறுர்.

இதனுல்தான் வருங்காலக் குருக்கள் கலாசாரமயப்படுத்திய ஒரு அறிவைப்பெற்றுச் சேவையாற்ற வேண்டுமென்பதற்காக ஒரு முழுமையான பெரிய குருமடத்தையும்—,

எம்பெருமான் கிறிஸ்துவின்ணகம் செல்லுமுன் விட்டுச் சென்ற கட்டளையை நிறைவேற்றவேண்டுமென்பதற்காக ஒரு நற்செய்திப் பணியகத்தையும்—

ஒவ்வொரு தமிழ் மகனும் சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமென்பதற்காக மனித முன்னேற்ற நடுநிலையத்தையும் -எமது தமிழ்க்கலை கலாசாரம் பேணிக் காக்கப்படவேண்டுமென்பதற்காக ஒரு கலை கலாசார நிலையத்தையும்,

எமது சமூகம் நற்சமூகமாக்கப்படவேண்டுமென்பதற்காக நற்சமூக நடுநிலையத்தையும்— ஆரம்பித்து வைத்தார்.

இன்னும் எம் மண்ணில் கிறிஸ்தவ நாகரிகம் வளர்க்கப்படவேண்டுமென்பதற்காக யாழ் பல்கலைக் கழகத்திலே கிறிஸ்தவ நாகரிகத் துறையைத் தொடங்கிவைத்தார்.



யாழ் ஆயர்
வண. தியோகுப்பிள்ளை

மேலும் தமிழ் மண்ணிலே உள்ள சமயங்களுக்கிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஒற்றுமை வளரவேண்டும் என்பதற்காக ஒரு நிலையத்தையும் ஆரம்பிக்கவுள்ளார்.

தன்னிகரில்லாத் தலைவனின் பணி சிறக்க வளரவேண்டுமென்றுல், அவர் நீடூழிகாலம் வாழவேண்டும். எனவே கத்தோலிக்க திருச்சபை மட்டுமல்ல, ஒவ்வொரு தமிழ் மகனும் அவருக்காக இறைவனை மன்றாடவேண்டும்.

### கொழும்பில்:

## சுவாமி யோகானந்தரின் பிறந்த நாள் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஏப்ரல் 9

''அன்னை சாரதா தேவியின் பெரும் ஆற்றலைக் கண்ட பெருமை யோகானந்த சுவாமியாருக்கு உரியது. சுவாமி விவேகானந்தரால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தின் உபதலைவராக முதன் முதலில் கடமை புரிந்த பெருமை இவருக்கே உண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இவரை தனது நேர்சீடராக 16 அல்லது17வயதில் வருவார் என அடையாளம்கண்டார்.

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சுவாமி யோகானந்தரின் பிறந்த நாள் அனுஷ்டிப்பின் போது உரையாற்றுகையில் சுவாமி சித்ரூபானந்தா மேற்கண்டவாறு கூறினுர்'

சுவாமி சம்பிரக் ஞானந்தா வைபவத்திற்குத் தலைமை வகித்தார்,

சுவாமி சித்ரூபானந்தா தனது உரையில் மேலும் கூறியதாவது ''சுவாமி யோகானந்தர் இளகிய சுபாவமும், தியான ஈடுபாடும் கொண்டவராகத் திகழ்ந்தார். அன்னை சாரததேவியின் பணியாளராகப் பல தடவைகளில் பணிபுரிந்தார்,

அன்னை தீர்த்த யாத்திரை செய்த பொழுது எல்லாம் அவருக்குப் பணிவிடை செய்தார். சுவாமி ராமகிருஷ்ணருக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் விழாக்களை எடுத்த பெருமை இவருக்கே உண்டு''

இப்படி அவர் கூறினுர்.

## பெருமாக்கடவை குளிர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

அளவெட்டி பெருமாக்கடவை துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த குளிர்த்தி விழா 10 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

அன்று பகல் அம்பாளுக்கு நூற்றி எட்டு சங்காபிஷேகமும் இடம் பெறும். (ச)

## றமழான் சிந்தனை




அ லை ஹ் ... நாளில், ... கொழுகை ... ''... புஸ் ஸலாத்'' ... கொழுமை ... வயிலினு ... சுவர்க்கத்தை நயடையச் செய்கின்ருன் ... புதப் போரில் இஸ்லாத்திற்காக உயிர்த்தியாகம் செய்தோரை 'பபுல்ஜிஹாத்' பேரர் ... வாயிலால் நுளையச் செய்கின்ருன். நோன்பாளிகளை ''... ய்யன்'' என்னும் வாயிலினுல் சுவர்க்கத்தை அடையச் செய்கின்ருன். தருமம் செய்தோரை ''பாபுஸ்ஸதகா'' தர்மத்தின் வாயிலினுல் சுவர்க்கத்தை அடையச் செய்கின்ருன்.

ஸஹார்முடிவு 4. 30
நோன்பு திறக்கும் நேரம் 6 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

09 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டு
## ★ வேலைவாய்ப்பு ★

1. **சவூதி அரேபியா**
சாதாரண தொழிலாளிமுதல் சகல தரப்பிலுள்ள 'வேலையாட்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு.

2. **குவைற்**
கிளினேர்ஸ் வேலையாட்கள்.

3. **யப்பான்**
யப்பான் நாட்டில் நாங்கள் முன்னர் எடுத்த கட்டிடப் பகுதி வேலையாட்கள், றெஸ்ரோறன்ற், (Restaurant) வேலையாட்கள் யாவரையும் தொடர்ந்தும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

● யப்பான் நாட்டிற்குப் போக விரும்பும் யாவரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
**Brown Road,**
**KOKUVIL.**

[சி-2092]

## NEW SCIENCE ACADEMY
B. M. C. முன்பாக – JAFFNA

ZOOLOGY
**Mr. M. Paranthaman**
B. Sc. Hons)

**G. C. E. (A/L) 1989**

அகஞ்சுரக்கும் சுரப்பிகள்
சமிபாட்டுத் தொகுதி
MON, TUE, FRI — 12.00 — 1.00
ஆரம்பம்: 10. 04. 1989 1.00 p. m

முளையவியல்
TUE THU — 7.30 — 8.30 a. m.
ஆரம்பம்: 13. 04. 1989 – THU — 7.30 a. m-

**G. C. E. (A/L) 1989**
**PAPER CLASS**

பாகுபாடு
பரம்பரையியல்
THU, FRI, — 4.00 — 5.30 p. m.
ஆரம்பம்: 13. 04. 1989 THU — 4.00 p. m

**G. C. E. (A/L) 1991**

குழியவியல்
SUNDAY — 7.00 — 9.00
ஆரம்பமாகிவிட்டது.

(C/ 2190)

## கண்ணீர்த் துளிகள் சமர்ப்பணம்

முன்னை நாள் உதவி அரச அதிபரும், எமது பெரு மதிப்புக்குரிய ஆசிரியருமான திரு. ச. பரராஜசிங்கம் அவர்கள் சிவபதமெய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயரும் கவலையும் அடைகிறோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ. தாமரைச்செல்வன்
சு. முகுந்தன்
பு. நக்கீரன்
க. சந்திரமோகன்

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.
[10349]

## சிவஞானத் தமிழ் மாநாடு: இன்று கவிதையரங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.9
யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும் சிவஞானத் தமிழ் மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. நம.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்'' என்னும் தலைப்பில் கவியரங்கு நடைபெறும்.

இக்கவியரங்கில் காரை செ. சுந்தரம்பிள்ளை, பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், கல்வயல் வே. குமாரசாமி, திரு.சோ. பத்மநாதன், திரு. சு. விஸ்வரத்தினம், திரு. க. தவமணிதாசன் ஆகியோர் பங்குபற்றுவார்கள். (ச)

## சாரதியும், நடத்துனரும் தாக்கப்பட்டனர்!

வல்வெட்டித்துறை, ஏப் 9
கடமையில் ஈடுபட்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ சாரதி ஒருவரும், நடத்துனர் ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளாகியதாகப் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் கலிகைச் சந்தியில் இச்சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது பாதிப்புக்குள்ளான நடத்துனர் மாணிக்கம் இந்திரகுமார் (வயது 35) மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இந்த விடயம் குறித்துப் பருத்தித்துறை டிப்போ அதிகாரிகள் படையினரின் முகாமில் முறைப்பாடு செய்திருப்பதாகவும் அறியவருகிறது. (உ-160)

## புலிகள் உரிமை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9
யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதரின் மரணத்திற்குத் தாமே பொறுப்பு எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

ஸ்ரீ லங்கா அரசு உலகை ஏமாற்ற தமிழ்ப்பேசும் மக்கள் மீது திணித்த சிவில் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதற்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழ் இளைஞர்கள் கொலை: லண்டன் வாசி கைது!

லண்டன், ஏப்ரல் 9
பாதுகாப்பு ஊழியர்களாகப் பணிபுரிந்த இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவர் லண்டனில் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் 34 வயதான லண்டன் வாசி ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அந்த நபரின் பெயர் விக்டர் காஸ்டிகடர் வேலை ஏதும் அற்றவர்.

பெற்ரோல் ஊற்றி எரிக்கப்பட்ட அந்தத் தமிழ் இளைஞர்களின் பெயர்கள் அம்பிகைபாகன் அநபாயன், (வயது21,) கந்தையா கணபதி விஞயகமூர்த்தி, (வயது 28)

கடந்த ஞாயிறு இவர்கள் கொல்லப்பட்டனர். இது பற்றிய செய்தி உதயனில் வெளிவந்திருந்தது தெரிந்ததே.

### சினிமா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
உயிரிழந்தார்.

விபத்து நடந்தபோது ராஜாவுடன் அவரது மனைவி கிருஷ்ணவேணியும் உடனிருந்தார். கிருஷ்ணவேணியும் 'ஜிக்கி' என்ற பெயரில் பின்னணிப் பாடகியாக தமிழ் சினிமாவில் பிரபலமாக இருந்தார்.

தேவதாஸ், மிஸ்ஸியம்மா உட்பட பல படங்களில் ஏ. எம். ராஜா பாடியிருக்கிறார். [ஒ-எ]

### பாதிப்புற்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும்.

நடமாடும் சுகாதார நிலையத்தின் சேவைக்கு ஒரு மாதத்துக்கு நான்கு லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வைத்திய சேவைக்குரிய உபகரணங்கள், மருந்து வகைகள், வாகனம் ஆகியவற்றுக்குத் தேவையான பணத்தை ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலகம் வழங்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இங்கு சில மாதங்களுக்கு முன்னர் வந்திருந்த செஞ்சிலுவைச் சங்க தலைமையகப் பிரதிநிதி ஒருவர் பார்த்துச் சென்றார்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் !விடுத்த வேண்டுகோளை அவர் தலைமை அலுவலகத்துக்குச் சிபார்சு செய்ததைத் தொடர்ந்து நடமாடும் சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது (உ-ஒ)

### அதிகாரங்களை. . . .

இந்திய இனத்தவரின் வருகாலம் போன்ற அம்சங்கள் அந்த உறுதி மொழியில் இடம்பெற்றிருந்தன.

அமைதிப்படை இலங்கையில் சில குறிப்பிட்ட பணிகளைச் செய்யவே உள்ளது.

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாத்தல், தமிழரின் அபிலாஷைகளை செயலில் நிறைவேற்றுவதற்கு இந்திய அரசு கொண்டுள்ள ஈடுபாட்டை பிரதிபலித்தல், அமைதியைப் பராமரித்தல், வடக்கு – கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக வழியைக் கொண்டு வருதல்– இவையே அப்பணிகள்.

–இப்படி திரு. டிக்ஸிற் சொன்னார். (உ–எ)

## அமெரிக்க பல்கலைக்கழகங்கள் உதவ விருப்பம்

யாழ்ப்பாணம், எப்ரல் 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உதவி புரிய அமெரிக்க பல்கலைக்கழகங்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

அண்மையில் அமெரிக்கா சென்ற யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் இது குறித்து பல பல்கலைக்கழக நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முக்கிய தேவைகள் குறித்த அப்போது விரிவாக ஆராயப்பட்டது. [ஒ-10]

## எழுத்தாளர் துருவன் காலமானர்

யாழ்ப்பாணம், ஏப். 9
ஈழத்தின் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான ''துருவன்'' பரராஜசிங்கம் காலமானர். அவருக்கு வயது 45.

இலங்கை நிர்வாக சேவையில் உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்த இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே சிறுகதை, நாடகம், ஹாஸ்யக் கட்டுரைகள் என்பவற்றை எழுதி வாசகர் அபிமானத்தைப் பெற்றவர். இவர் ஒரு சிறந்த நடிகருமாவார். 'கலைச்செல்வி'ப் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். (அ)

## கண்டியில் பிக்குகள் மீது பிரம்படி

கொழும்பு, ஏப்ரல் 9
தேசப் பிரேமி சகோதரர்கள் கொல்லப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து,நேற்று முன்தினம் நண்பகல் கண்டி தலதா மாளிகை முன்பாக சத்தியாக்கிரகம் செய்த சுமார் 150 பிக்குகளைப் பொலீஸார் பிரம்பால் அடித்துக் கலைத்தனர்.

அரை மணி நேரமே சத்தியாக்கிரகம் நீடித்தது. கலைந்து செல்லும்படி பொலீஸார் விடுத்த வேண்டுகோளை பிக்குமார் ஏற்க மறுத்தனர். அதனைத் தொடர்ந்தே பிரம்படிப் பிரயோகம் இடம் பெற்றது.

மஞ்சள் அங்கிகள் மற்றும் செருப்பு, குடைகளை அந்த இடத்தில் விட்டுவிட்டே பிக்குமார் சிதறி ஓடினர். [உ எ]

## கல்கத்துக்கு விருது

புதுடில்லி, ஏப்ரல் 9
இலங்கையில் பணிபுரியும் இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. சி. எஸ். கல்கத்துக்கு இராணுவ சேவையில் அதி விசேஷ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அந்த விருதினை இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து வழங்கினார்.

சஷ்டமான காலத்தில் பணியாற்றியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டது. (அ )

## மரண அறிவித்தல்

### திருமதி தேவசுந்தரி கனகசபை

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தேவசுந்தரி கனகசபை 07-04-89 இல் காலமானர். இவர் எஸ். கனகசபையின் [ஓய்வு பெற்ற M. L. T] அன்பு மனைவியும் சந்திரமோகனின் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா] அன்புத் தாயாரும் நடராசா [ஓய்வு பெற்ற High Court Registrar] லீலாவதி, சிவகாமசுந்தரி, கமலாவதி [ஆசிரியை திருநெல் வலி R. C] ஆகியோரின் அன்புச் சகோதரியும் கரம்பொன் மேற்கு கந்தையா [நொத்தாரிசு] காலஞ்சென்ற திருமதி அம்பிகாதேவி நடராசா [ஆசிரியை], சண்முகநாதன், காலஞ்சென்ற இராமலிங்கம் R. M. P. நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்ஷினியின் அன்பு மாமியும் நிவேதிகாவின் அன்புப் பேத்தியும் திருமதி மனோன்மணி செல்லையாவின் அன்புப் பெருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கனகசபை.

செல்லத்துரை ஒழுங்கை,
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(10339)

## மரண அறிவித்தல்கள்

### திரு. கனகரட்ணம் பரராஜசிங்கம்
B.A. (Hons.) S.L.A.S.
[முன்னாள் உதவி அரசாங்க அதிபர் – குச்சவெளி]

திரு. கனகரட்ணம் பரராஜசிங்கம் முன்னாள் உதவி அரசாங்க அதிபர், குச்சவெளி) காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் பரிமளத்தின் சிரேஷ்ட புதல்வனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுதன், மதன், தரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், ஜெயராஜசிங்கம், இரட்ணராஜசிங்கம் (Watter Supply, Jaffna Teaching Hospital), பவானி, ராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னத்துரை (Village Head Man Kantalai), பொன்னம்மா, திரு. கதிரவேலு நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சுக்தானந்தன் (France), சச்சிதானந்தன், அழகுராணி, சூரியகுமார், இராசகுமார் (London), லீலாராணி (Teacher R/C/M/S, Nallur), சந்திரசிறி, ஜெயசிறி, திரு. நா. பாலசுப்பிரமணியம் Jaffna Post Office) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறீஸ்கந்தராசாவின் Kumaravel Medical Hall, Point-Pedro) சகலனும், மோகன், லதா, சுமதி, எழில்தாஸ் ஆகியோரின் மாமனும், மதுரா, மாதுளா ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 09-04-1989 (இன்று) ஞாயிற்றுக்கிழமை இல. 15, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இல. 15, ஆடியபாதம் ரோட்.
நல்லூர், கல்வியங்காடு. (C/2096)

### திரு. G. நீக்கலஸ்

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த திரு. G. நீக்கலஸ் காலமானர்.

இவர் யோசேப்பின் அன்புக் கணவரும், திருமதி பேள்பிலிப் (இளைப்பாறிய ஆசிரியை, கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம்), விக்ரர் (Transkei), முன்னாள் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்), சில்வெஸ்ரர் (Unctad Gambia முன்னாள் இலங்கை மத்திய வங்கி), நெல்சன் (Zimbabwe முன்னாள் அதிபர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர்) ஆகியோரின் அருமைத் தந்தையும், விக்ரர் பிலிப் [இளைப்பாறிய ஆசிரியர் புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை], திருமதி லில்லி எமல்டா [Transkei], திருமதி எலிசபெத் ஜெயராணி [Gambia], திருமதி யூலியா இராஜேஸ் [Zimbabwe] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கரம்பொன் சேமக்காலைக்கு 10 – 04 – 89 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
விக்ரர் பிலிப்

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(103)

### திரு. மு. பாலசுந்தரம்

முன்னாள் பிறவுன்ஸ் குறூப் உத்தியோகத்தரும், தற்போது கிரிமலை சிறுப்பர் மட முகாமையாளரும், அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு.மு.பாலசுந்தரம் காலமானர்.இவர் காலஞ்சென்றவர்களான திரு. முருகேசு முத்தாச்சி தம்பதிகளின் புதல்வரும், மீனம்பிகையின் கணவரும்,யோகேஸ்வரியின் தகப்பனும், காலஞ்சென்றவரான சிவராஜாவின் மாமனும், காலஞ்சென்றவரான நிமலன், கோகுலன் [யாழ். மத்திய கல்லூரி], பாமதி [யா/ வேம்படி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்றவர்களான திரு, திருமதி. சண்முகம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவஞானசுந்தரம், சண்முகசுந்தரம் ஆகியோரதும் தற்பரசுந்தரம், ராஜேஸ்வரி ஆகியோரதும் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 8, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை இல்லத்திலிருந்து இன்று ஞாயிறு[9.4.89) காலை 10.30 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலைத் தயவுசெய்து உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. கனகசுந்தரம்,

No. 8. பொன்னப்பா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (10329)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் 09 04 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org